# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## இலங்கைத் துறைமுக அதிகாரசபை (திருத்தம்)

***1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் அவர்களால் 2023, ஒகத்து மாதம் 22 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2023, யூலை மாதம் 28 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

***[ 199 ஆம் சட்டமூலம் ]***

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2:*** *1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறாக சட்டப்பயன் துறைமுக அதிகாரசபை பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதாகும்.*

# இலங்கைத் துறைமுக அதிகாரசபை (திருத்தம்)

*ச.வ.ஓ. 4/2023*

## 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின்    ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (ஈ) என்னும் பந்தியில், "சேகரிப்பாளர்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சேகரிப்பாளர்;" என்னும் சொல்லை இடுவதன் மூலம்;

(2) அதன் (உ) என்னும் பந்தியில், "பிரதிநிதியொருவர்." என்னும் சொல்லுக்குப் பதிலாக, "பிரதிநிதியொருவர்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அதன் (உ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியை சேர்ப்பதன் மூலமும்:-

"(ஊ) துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அவ்வமைச்சரின் அமைச்சின் பிரதிநிதியொருவர்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.